# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1987/51 - 2016 ඔක්තෝබර් මස 07 වැනි සිකුරාදා - 2016.10.07

*1987/51 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 62.

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, எல்லா உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் எல்லா வகையான உண்ணத்தக்க எண்ணெய்கள் சில்லறையாகவோ, தொகையாகவோ விற்பனைப்படுத்தலில் அதன் போத்தல்களில், பொதிகளில் அல்லது கொள்கலன்களின் மீது தெளிவாக பின்வருவனவற்றை குறித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

(அ) தொகுதி இலக்கம் ;
(ஆ) உற்பத்தித் திகதி ;
(இ) காலாவதித் திகதி ;
(ஈ) கொள்ளளவு/நிறை ;
(உ) ஆகக்கூடிய சில்லறை விலை ;
(ஊ) உற்பத்தியாளர் பெயர் மற்றும் முகவரி ;
(எ) இறக்குமதி செய்யப்படுவதாயின் இறக்குமதியாளரின் பெயர், முகவரி மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட நாடு ;
(ஏ) மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டு கொள்கலன்களில் மறுபடியும் பொதி செய்யப்படுவதாயின் உற்பத்தி திகதி மற்றும் பொதியிடப்பட்ட திகதி ;
(ஐ) கலவையாக்கப்பட்ட உணவு எண்ணெய் எனில், அதனைக் குறிப்பிட்டு, கலவைகளின் விபரங்கள், விகிதாசாரப் பகுதிகளுடன் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆம் திகதிய 1303/1 ஆம் இலக்க மற்றும் 2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதிய 1407/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரைகள் முறையே இலக்கம் 2 மற்றும் இலக்கம் 4 இல் உள்ளடக்கப்பட்ட "உண்ணத்தக்க எண்ணெய் கொள்கலன்களில் அல்லது பொதிகளினதும்" பணிப்புரைகளை இப்பணிப்புரை மூலம் இரத்து செய்கின்றது.

இப்பணிப்புரை 2017, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரட்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2016, ஒற்றோபர் 7.

10 - 1236




இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.